***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//167 /2019 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | எழிலரசன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 23.10.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது பாவூர்சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். எதிரி சுரேஷை எனக்கு தெரியாது. பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்ட இயலாது. வழக்கில் இறந்து போன தமிழரசன் என் மாமா மகன். அசா.1 செல்வராஜ் என் உறவினர். தேதி, மாதம் நினைவில் இல்லை. சுமார் 10 வருடத்திற்கு முன்பு நான் பாவூர்சத்திரத்தில் இருந்த போது பக்கத்தில் இருந்த நபர்கள் தமிழரசனுக்கு பாவூர்சத்திரம் ரயில்வேகேட் அருகே விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் உடனே பிரியா மருத்துவமனைக்கு சென்று தமிழரசனை பார்த்தேன். அவருக்கு தலையில் அடிபட்டிருந்தது. பின்னர் தமிழரசனை திருநெல்வேலியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்தார். இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 15.09.2016 ம் தேதியன்று காலை 11.30 மணிக்கு நானும் அசா.1 ம் அசா.1 ன் இருசக்கர வாகனத்திலும் வழக்கில் இறந்து போன தமிழரசன் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்திலும் திருநெல்வேலி to தென்காசி மெயின் ரோட்டில் பாவூர்சத்திரம் ரயில்வே கேட் அருகே நாங்கள் வந்து கொண்டிருந்த போது இவ்வழக்கின் எதிரி மேற்கிலிருந்து கிழக்காக தன்னுடைய இருசக்கர வாகனத்தில் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து தமிரசனின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன விசயங்கள் உண்மை என்றாலும் தற்போது எதிரியை வழக்கிலிருந்து விடுவிக்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//167 /2019 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | **செல்வராஜ்** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 23.10.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது பாவூர்சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வயது முதிர்வு காரணமாக தற்போது வேலை எதுவும் பார்க்கவில்லை. எதிரி சுரேஷை எனக்கு தெரியாது. பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்ட இயலாது. வழக்கில் இறந்து போன தமிழரசன் என் உடன்பிறந்த தம்பி. தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2016ம் வருடம் நான் என்னுடைய வீட்டில் இருந்த போது தமிரசனின் மகன் ராஜ்குமார் என்னிடம் அவரின் அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லாததாகவும் சீக்கிரம் வாருங்கள் என என்னிடம் கூறினார். நான் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கிருந்த என் தம்பியை ஷிபா மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் இறந்து விட்டார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என்னிடம் கேட்டு கொண்டதன் பேரில் நான் போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதி இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது. **மேற்படி புகார் மனுவில்**

**உள்ள கையொப்பம் மட்டும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
போலிசார் என்னை விசாரிக்கவில்லை.
அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 15.09.2016 ம் தேதியன்று காலை 11.30 மணிக்கு நானும் சாட்சி எழிலரசனும் என்னுடைய இருசக்கர வாகனத்திலும் வழக்கில் இறந்து போன தமிழரசன் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்திலும் திருநெல்வேலி to தென்காசி மெயின் ரோட்டில் பாவூர்சத்திரம் ரயில்வே கேட் அருகே நாங்கள் வந்து கொண்டிருந்த போது இவ்வழக்கின் எதிரி மேற்கிலிருந்து கிழக்காக தன்னுடைய இருசக்கர வாகனத்தில் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து தமிரசனின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுததேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன விசயங்கள் உண்மை என்றாலும் தற்போது எதிரியை வழக்கிலிருந்து விடுவிக்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.
//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi